DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.208/2016**

**prosecution witness: Pw - 3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் அந்தோனி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**01.11.2023**

குறுக்கு விசாரணை:-

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்

1. நான் ஏற்கனவே 02.12.2016ம் தேதி சாட்சியம் அளித்துள்ளேன் அப்போது நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை மனுதாரர் ஜெரோம் அழைத்து வந்ததன் பேரில சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் AEO ஆக இருப்பதால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வராமல் சாட்சியம் அளிக்க கூடாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நாகசுந்தரத்தை எனக்கு நேரடியாக தெரியாது. அவர் நேரடியாக எதிரி மீது என்னிடம் புகார் கொடுக்கவில்லை தபால் மூலம் அனுப்பினார். அந்த புகார் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் அனுப்பப்பட்ட மனு என்றால் இல்லை புகார் தான் அனுப்பினார். 03.12.2016ம் தேதி மண்டபம நடுநிலை பள்ளிக்கு ஜெரோம் விளக்கம் கொடுக்கவேண்டும் என்று ஒரு குறிப்பாணை அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதில் பொருள் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் மனுதாரர் நாகசுந்தரம் என்பவர் கோரும் தகவலுக்கு உரிய விளக்கம் வழங்குதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது கையொப்பம் என்றால் சரிதான். அந்த குறிப்பாணை எ.ம.சா.ஆ.1 ஆகும். அந்த குறிப்பாணையில் 2வது பாராவில் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் தகவல் கோரப்பட்டதில் பார்வை 2ன் படி சம்பந்தபட்ட ஆசிரியர் திரு.ஜெரோம் என்பவருக்கு உரிய நடவடிக்கை

எடுக்க வேண்டி விளக்கம கேட்டு கடிதம் அனுப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான்.அந்த குறிப்பாணையின் நகல் எதிரி நாகசுந்தரதிற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த குறிப்பாணையில் சொல்லப்பட்டுள்ள விவரப்படி தான் மனுதாரருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பட்டது என்றும், மேற்படி குறிப்பாணையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை நகல் ஒன்று எதிரிக்கு சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி அனுப்பிய மனுவை தவிர வேறு எந்த மனுவும் எனக்கு அனுப்பவில்லை என்றால் தெரியாது. எனக்கு எதிரி அனுப்பிய புகார் மனுவை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை மண்டபம் உதவி கல்வி அலுவலகராக பணிபுரிந்தேன் என்றால் 2014 ஜீன் முதல் 2017 ஜீன் வரை பணியாற்றினேன். நான் வழங்கிய குறிப்பாணையில் குற்ற எண்.08/2013 அனைத்து மகளிர் காவல் நிலைய வழக்கு சம்பந்தமாக விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் அலுவலகத்திற்கு மனுதாரர் ஜெரோம் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று தகவல் அனுப்பினாரா என்றால் இல்லை. அந்த வழக்கு எந்த நிலையில் இருந்தது என்று மனுதாரர் ஜெரோம் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு மனுதாரர் ஜெரோம் என்னிடம் முன் அனுமதி எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்ட புகார்தாரருடன் சமாதானமாக சென்று சமாதான தீர்ப்பு ஏற்பட்டது என்று தீர்ப்பு நகல் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எனக்கு கொடுத்த விளக்கத்தில் உள்ள விபரங்களை அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை அதனை நான் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. ரோடு நடுநிலை பள்ளியில் பெற்றோர் ஆசீரியர் கழகம் இயங்கி வருகிறது என்றால் சரிதான். நான் பணியாற்றிய சமயத்தில் பெற்றோர் ஆசிரியர் கலகத்தில் தலைவர் பஞ்சவர்ணம் என்பவர் என்றால் எனக்கு தெரியாது. பஞ்சவர்ணம் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் செயலாளராக இருந்தார் என்றால் தெரியாது. நான் பணியாற்றிய காலத்தில் ஜெரோம் என்பவர் மீதும், ஜலீலா ஆசிரியர் என்பவர் மீதும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் இருந்து எனக்கும், முதன்மை கல்வி அலுவலகருக்கு புகார் வந்தது என்றால் சரிதான். அந்தபுகார் மனு என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான் அது மாவட்ட கல்வி அலுவலருக்கு வந்தது. DEO விற்கு அனுப்பிய புகார் மனுவில் ஜெரோம் மற்றும் ஜலீலா என்பவர் மீது 11 குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டு புகார் மனுஅனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட கல்வி அலுவலரால் ந.க.எண்.2376/ஆ 1/2015 ன் படி 15.06.2015 ம் தேதி ஜெரோம் ஆசிரியரை பணிமாறுதல் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பணிமாறுதல் வழங்கிய பின்பும் ஜெரோம் என்பவர் மாவட்ட தொடக்க கல்வி அலுவலரின் உத்தரவை மதிக்காமல் அதே பள்ளியில் பணியாற்றினார் என்றால் எனக்கு தெரியாது. அந்த காலத்தில் இந்த 11 குற்றச்சாட்டுகளை வழியுறுத்தி அந்த

பள்ளிக்கு inspection சென்ற போது பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் இருந்து என்னிடம் நடவடிக்கை எடுக்க கோரிய போது உடனடினாக பணிமாறுதல் வழங்கப்படும் என்று உத்தரவாதம் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு ஜெரோம் மற்றும் ஜலீலா ஆகியோரை பாடம் எடுக்க சொன்ன போது அவர்கள் எனது உத்தரவை மதிக்கவில்லை, அவர் நீதிமன்றம் செல்வதாக கூறியதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பயமாக இருக்கிறது என்று கூறினேன் என்றால் ஞாபகம் இல்லை. DEO அனுப்பிய குறிப்பாணை எ.ம.சா.ஆ-2 ஆகும். நாகசுந்தரம் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தான் எனக்கு மனு அனுப்பினார் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.